அந்தரங்கமானது

# இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்

## க.பொ.த (சாதாரண தர)ப் பரீட்சை - 2018

## 16 - இஸ்லாம்

### புள்ளித்திட்டம்




இந்த விடைத்தாள் பரீட்சகர்களின் உபயோகத்துக்காகத் தயாரிக்கப்பட்டது. பிரதம பரீட்சகர்களின் கலந்துரையாடல் நடைபெறும் சந்தர்ப்பத்தில் பரிமாறிக்கொள்ளும் கருத்துக்களுக்கிணங்க, இதில் உள்ள சில விடயங்கள் மாறலாம்.

இறுதித் திருத்தங்கள் உள்ளடக்கப்படவுள்ளன

முழுப்பதிப்புரிமையுடையது

Download all Past Papers>  https://bookbeekid.com/resource/past-papers/

Download all Past Papers>  https://bookbeekid.com/resource/past-papers/

## கல்விப் பொது தராதரப் பத்திர (சாதாரண தர)ப் பரீட்சை - 2018

## 16 - இஸ்லாம்

### இஸ்லாம் I

**1 ஆம் வினாத்தாளின் 40 வினாக்கள்**

1 x 40 = 40 புள்ளிகள்

### இஸ்லாம் II

**1 ஆம் வினா கட்டாயமானது**

ஒவ்வொரு பிரிவுக்கும் 2 புள்ளிகள் வீதம் பத்து வினாக்கள் — 2 x 10 = 20 புள்ளிகள்

**2 முதல் 7 ஆம் வினாக்கள்**

தெரிவு செய்யப்பட்ட 4 வினாக்களுக்கு — 4 x 10 = 40 புள்ளிகள்

மொத்தம் 100 புள்ளிகள்

**பகுதி வினாக்களுக்கான புள்ளிகள்**

(2 ஆம் வினாவில் இருந்து 6 ஆம் வினா வரை)

| | | |
|---|---|---|
| (i) | பகுதி | 02 புள்ளிகள் |
| (ii) | பகுதி | 03 புள்ளிகள் |
| (iii) | பகுதி | 05 புள்ளிகள் |
| | | 10 புள்ளிகள் |

**07 வினாவில் தெரிவு செய்த இரு பகுதிகளுக்கு**

| | | |
|---|---|---|
| (i) | பகுதி | 05 புள்ளிகள் |
| (ii) | பகுதி | 05 புள்ளிகள் |
| | | 10 புள்ளிகள் |

| | | |
|---|---|---|
| **வினாத்தாள் I** | **மொத்தம்** | **40 புள்ளிகள்** |
| **வினாத்தாள் II** | **மொத்தம்** | **60 புள்ளிகள்** |
| | | **100 புள்ளிகள்** |



Download all Past Papers> https://bookbeekid.com/resource/past-papers/

## விடைத்தாள்களுக்குப் புள்ளியிடல் - பொது நுட்ப முறைகள்

விடைத்தாள்களுக்குப் புள்ளியிடும் போதும், புள்ளிப்பட்டியலில் புள்ளிகளைப் பதியும் போதும் ஓர் அங்கீகரிக்கப்பட்ட முறையைக் கடைப்பிடித்தல் கட்டாயமானதாகும். அதன்பொருட்டு பின்வரும் முறையில் செயற்படவும்.

1. விடைத்தாள்களுக்குப் புள்ளியிடுவதற்கு சிவப்பு நிற குமிழ்முனை பேனாவை பயன்படுத்தவும்.
2. சகல விடைத்தாள்களினதும் முதற்பக்கத்தில் உதவிப் பரீட்சகரின் குறியீட்டெண்ணைக் குறிப்பிடவும். இலக்கங்கள் எழுதும்போது **தெளிவான இலக்கத்தில்** எழுதவும்.
3. இலக்கங்களை எழுதும்போது பிழைகள் ஏற்பட்டால் அவற்றைத் தனிக்கோட்டினால் கீறிவிட்டு, மீண்டும் பக்கத்தில் சரியாக எழுதி, சிற்றொப்பத்தை இடவும்.
4. ஒவ்வொரு வினாவினதும் உபபகுதிகளின் விடைகளுக்காக பெற்றுக்கொண்ட புள்ளியை பதியும் போது அந்த வினாப்பகுதிகளின் இறுதியில் △ இன் உள் பதியவும். இறுதிப் புள்ளியை வினா இலக்கத்துடன் ☐ இன் உள் பின்னமாகப் பதியவும். புள்ளிகளைப் பதிவதற்கு பரீட்சகர்களுக்காக ஒதுக்கப்பட்ட நிரலை உபயோகிக்கவும்.

**உதாரணம் - வினா இல 03**

(i) ........................................................................ ✓ △ 4/5

........................................................................

........................................................................

(ii) ........................................................................ ✓ △ 3/5

........................................................................

........................................................................

(iii) ........................................................................ ✓ △ 3/5

........................................................................

........................................................................

(03) (i) $\frac{4}{5}$ + (ii) $\frac{3}{5}$ + (iii) $\frac{3}{5}$ = $\boxed{\frac{10}{15}}$

**பல்தேர்வு விடைத்தாள் (துளைத்தாள்)**

1. புள்ளி வழங்கும் திட்டத்தின் படி சரியான தெரிவைத் துளைத்தாளில் அடையாளமிடவும். அவ்வாறு அடையாளமிடப்பட்ட இடத்தை வெட்டி நீக்கித் துளைத்தாளைத் தயாரிக்கவும். துளைத்தாளை விடைகளின் மீது சரியாக வைத்துக்கொள்ளக்கூடியதாகச் சுட்டெண் அடைப்பையும் வெட்டி நீக்கவும். சரியான விடைகளின் எண்ணிக்கையைக் காட்டும் அடைப்பையும் வெட்டி நீக்கவும். சரியான, பிழையான விடைகளை குறிப்பிடக்கூடியதாக ஒவ்வொரு வரிசைக்கும் இறுதியில் வெற்று நிரையொன்றை வெட்டி ஏற்படுத்திக் கொள்ளவும். வெட்டிக்கொண்ட துளைத்தாளில் பிரதம / மேலதிக பிரதம பரீட்சகரிடம் கையொப்பம் பெற்று அங்கீகரித்துக் கொள்ளவும்.

2. அதன் பின்னர் விடைத்தாளை நன்கு பரிசீலித்துப் பார்க்கவும். ஏதாவது வினாவுக்கு, ஒரு விடைக்கும் அதிகமாக குறியிட்டிருந்தாலோ, ஒரு விடைக்காவது குறியிடப்படாமலிருந்தாலோ தெரிவுகளை வெட்டிவிடக்கூடியதாக கோடொன்றைக் கீறவும். சில வேளைகளில் பரீட்சார்த்தி முன்னர் குறிப்பிட்ட விடையை அழித்துவிட்டு வேறு விடைக்குக் குறியிட்டிருக்க முடியும். அவ்வாறு அழித்துள்ள போது நன்கு அழிக்காது விட்டிருந்தால், அவ்வாறு அழிக்கப்பட்ட தெரிவின் மீதும் கோடிடவும்.

3. துளைத்தாளை விடைத்தாளின் மீது சரியாக வைக்கவும். சரியான விடையை ✓ அடையாளத்தாலும் பிழையான விடையை ○ அடையாளத்தாலும் இறுதி நிரலில் அடையாளமிடவும். சரியான விடைகளின் எண்ணிக்கையை அவ்வவ் தெரிவுகளின் இறுதி நிரையின் கீழ் அத்துடன் அவற்றை கூட்டி சரியான புள்ளியை உரிய கட்டத்தில் எழுதவும்.


Download all Past Papers>> https://bookbeekid.com/resource/past-papers

**கட்டமைப்பு கட்டுரை விடைத்தாள்கள்**

1. பரீட்சார்த்திகளால் விடைத்தாளில் வெறுமையாக விடப்பட்டுள்ள இடங்களையும், பக்கங்களையும் குறுக்குக் கோடிட்டு வெட்டிவிடவும். பிழையான பொருத்தமற்ற விடைகளுக்குக் கீழ் கோடிடவும். புள்ளி வழங்கக்கூடிய இடங்களில் ✓ அடையாளமிட்டு அதனைக் காட்டவும்.
2. புள்ளிகளை ஓவலண்ட் கடதாசியின் இடது பக்கத்தில் குறிக்கவும்.
3. சகல வினாக்களுக்கும் கொடுத்த முழுப் புள்ளியை விடைத்தாளின் முன் பக்கத்திலுள்ள பொருத்தமான பெட்டியினுள் வினா இலக்கத்திற்கு நேராக 2 இலக்கங்களில் பதியவும். வினாத்தாளில் உள்ள அறிவுறுத்தலின் படி வினாக்கள் தெரிவு செய்யப்படல் வேண்டும். எல்லா வினாக்களினதும் புள்ளிகளும் முதல் பக்கத்தில் பதியப்பட்ட பின் விடைத்தாளில் மேலதிகமாக எழுதப்பட்டிருக்கும் விடைகளின் புள்ளிகளில் குறைவான புள்ளிகளை வெட்டி விடவும்.
4. மொத்த புள்ளிகளை கவனமாக கூட்டி முன் பக்கத்தில் உரிய கூட்டில் பதியவும். விடைத்தாளில் வழங்கப்பட்டுள்ள விடைகளுக்கான புள்ளியை மீண்டும் பரிசீலித்த பின் முன்னால் பதியவும். ஒவ்வொரு வினாக்களுக்கும் வழங்கப்படும் புள்ளிகளை உரிய விதத்தில் எழுதுவும்.

## புள்ளிப்பட்டியல் தயாரித்தல்

ஒரு வினாப்பத்திரம் உள்ள பாடங்கள் தவிர ஏனைய சகல பாடங்களுக்குமான இறுதிப்புள்ளி குழுவினுள் கணிப்பிடப்படமாட்டாது. இது தவிர ஒவ்வொரு வினாப் பத்திரத்துக்குமான இறுதிப்புள்ளி தனித்தனியான புள்ளிப்பட்டியலில் பதியப்பட வேண்டும். வினாப்பத்திரம் I இற்குரிய புள்ளிப்பட்டியலில் "வினாப்பத்திரம் I" என்ற நிரலில் பதிந்து எழுத்திலும் எழுத வேண்டும். பகுதிப்புள்ளிகளை உள்ளடக்கி "வினாப்பத்திரம் II" எனும் நிரலில் வினாப்பத்திரம் II இற்குரிய இறுதிப்புள்ளியை பதிய வேண்டும். 43 சித்திரப் பாடத்திற்குரிய I, II, மற்றும் III ஆம் வினாப்பத்திரங்களுக்குரிய புள்ளிகளை தனித்தனியாக புள்ளிப்பட்டியலில் பதிந்து எழுத்திலும் எழுதுதல் வேண்டும்.

21 - சிங்களமொழியும் இலக்கியமும், 22 - தமிழ்மொழியும் இலக்கியமும் ஆகிய இரு பாடங்களும் வினாப்பத்திரம் I இற்குரிய புள்ளி புள்ளிப்பட்டியலில் "வினாப்பத்திரம் I" என்ற நிரலில் பதிந்து எழுத்திலும் எழுத வேண்டும். வினாப்பத்திரம் II, III இற்கான புள்ளிகளை தனி தனியான புள்ளித்தாளில் பகுதிப்புள்ளிகளை உள்ளடக்கி "வினாப்பத்திரம் II, III" எனும் நிரல்களில் உரிய நிரலில் பதிதல் வேண்டும்.

**சகல சந்தர்ப்பங்களிலும் ஒவ்வொரு வினாப்பத்திரத்திற்கும் உரிய முழுப்புள்ளியானது முழுத்தானத்தில் வினாப்பத்திரம் I, II, மற்றும் III என்ற நிரலில் உரிய வகையில் பதிதல் வேண்டும். எந்தவிதமான காரணங்களிற்காகவும் வினாப்பத்திரத்தின் இறுதிப்புள்ளியானது தசம தானங்களில் பதியப்படலாகாது.**

o o o


Download all Past Papers>> https://bookbeekid.com/resource/past-papers/

සියලු ම හිමිකම් ඇවිරිණි / முழுப் பதிப்புரிமையுடையது / All Rights Reserved]

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்
Department of Examinations, Sri Lanka

**16 T I, II**

අධ්‍යයන පොදු සහතික පත්‍ර (සාමාන්‍ය පෙළ) විභාගය, 2018 දෙසැම්බර්
**கல்விப் பொதுத் தராதரப் பத்திர (சாதாரண தர)ப் பரீட்சை, 2018 டிசெம்பர்**
**General Certificate of Education (Ord. Level) Examination, December 2018**

ඉස්ලාම් I, II
**இஸ்லாம் I, II**
Islam I, II

03.12.2018 / 0830 - 1140

පැය තුනයි
**மூன்று மணித்தியாலம்**
*Three hours*

අමතර කියවීම් කාලය - මිනිත්තු 10 යි
**மேலதிக வாசிப்பு நேரம் - 10 நிமிடங்கள்**
Additional Reading Time - 10 minutes

**வினாப்பத்திரத்தை வாசித்து, வினாக்களைத் தெரிவுசெய்வதற்கும் விடை எழுதும்போது முன்னுரிமை வழங்கும் வினாக்களை ஒழுங்கமைத்துக் கொள்வதற்கும் மேலதிக வாசிப்பு நேரத்தைப் பயன்படுத்துக.**

## இஸ்லாம் I

**கவனிக்க :**
(i) **எல்லா** வினாக்களுக்கும் விடை எழுதுக.
(ii) **1** தொடக்கம் **40** வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றிலும் (1), (2), (3), (4) என இலக்கமிடப்பட்ட விடைகளில் **சரியான** அல்லது **மிகப் பொருத்தமான** விடையைத் தெரிவுசெய்க.
(iii) **உமக்கு வழங்கப்பட்டுள்ள விடைத்தாளில் ஒவ்வொரு வினாவுக்கும் உரிய வட்டங்களில் உமது விடையின் இலக்கத்தை ஒத்த வட்டத்தினுள்ளே புள்ளடியை (×) இடுக.**
(iv) அவ்விடைத்தாளின் மறுபக்கத்தில் தரப்பட்டுள்ள மற்றைய அறிவுறுத்தல்களையும் கவனமாக வாசித்து, அவற்றைப் பின்பற்றுக.

1. அல்லாஹ்வின் திருநாமங்களில் 'அர்-ரஹீம்' என்ற சொல் சுட்டும் பொருள்
(1) மிகவும் தூய்மையானவன் (2) அதிகம் மன்னிப்பவன்
(3) நிகரற்ற அன்புடையவன் (4) அனைத்தையும் அறிந்தவன்

2. இஸ்லாமிய அகீதாவுக்கு அடிப்படையாக அமைபவை,
(1) அல் - குர்ஆனும் சுன்னாவும் (2) இஜ்மாவும் கியாஸும்
(3) அல் - குர்ஆனும் இஜ்மாவும் (4) கியாஸும் உர்பும்

3. ப:.ஸ், மஹ்ஷர், ஹிஸாப், ஜன்னா போன்ற மறுமை வாழ்வுடன் தொடர்புடைய விடயங்களை உள்ளடக்கும் பிரிவு
(1) அல் - இலாஹிய்யாத் (2) அன் - நுபுவ்வாத்
(3) அஸ் - ஸம் இய்யாத் (4) அர் - ருஹானிய்யாத்

4. 'வரஉ' என்பது பேணுதலைக் குறிப்பது போல 'தக்வா' என்பது எதனைக் குறிக்கும்?
(1) பாவமன்னிப்பு (2) இறையச்சம்
(3) பற்றற்ற வாழ்வு (4) பொறுப்புச் சாட்டல்

5. இமாம் அஹ்மது இப்னு ஹன்பல் (ரஹ்), அபுமன்ஸுர் அல் - மாதுருதி (ரஹ்) ஆகிய இருவரும்,
(1) அகீதாக் கலை தொடர்பான அறிஞர்களாவர்.
(2) ஹதீஸ் கலை தொடர்பான அறிஞர்களாவர்.
(3) சட்டக்கலை தொடர்பான அறிஞர்களாவர்.
(4) தப்ஸீர் கலை தொடர்பான அறிஞர்களாவர்.

6. இமாம் மாலிக் (ரஹ்) அவர்களது சிறப்புப் பெயர்
(1) இமாமுல் அ:.ழம் (2) ஆலிமுல் குறைஷ்
(3) ஸைபுல்லாஹ் (4) இமாமுல் மதீனா


Download all Past Papers> https://bookbeekid.com/resource/past-papers/

7. நபி (ஸல்) அவர்களது காலத்தில், தான் ஒரு நபி என்று வாதிட்டவர்
(1) துலைஹா (2) ஸஜா (3) முஸைலமா (4) அஸ்வத் அன்ஸி

8. 'குத்தாபுல் வஹி' எனப்படுவோர்
(1) அல் - குர்ஆனை மனனமிட்டோர்
(2) அல் - குர்ஆனுக்கு விளக்கமளித்தோர்
(3) அல் - குர்ஆனை தனிப்பட்ட முறையில் எழுதி வைத்தோர்
(4) வஹி அருளப்பட்டதும் நபி (ஸல்) அவர்களது மேற்பார்வையில் அதனை எழுதிப் பதிவு செய்தோர்

9. சுன்னத்தான நோன்பு நோற்பதற்குப் பொருத்தமான வார நாட்கள்
(1) வெள்ளி, சனி (2) திங்கள், வியாழன்
(3) ஞாயிறு, திங்கள் (4) வியாழன், வெள்ளி

10. தொழுகையின் பர்ளுகளில் **அடங்காதது**
(1) முதல் தக்பீர் சொல்லல் (2) பாதிஹா சூரா ஓதுதல்
(3) இரு சுஜூதுகள் செய்தல் (4) தொழும் இடம் சுத்தமாக இருத்தல்

11. 'அஃலுஸ் ஸுன்னா வல்ஜமாஅத்' எனப்படுவோர்
(1) ஹதீஸ் கிரந்தங்களைத் தொகுத்தோர்
(2) நபி (ஸல்) அவர்களையும் ஸஹாபாக்களையும் பின்பற்றி வாழ்வோர்
(3) நான்கு இமாம்களையும் பின்பற்றுவோர்
(4) இஸ்லாமிய அகீதாவுக்கு முரண்பட்டோர்

12. ஒரு முஃமினிடம் இரு பண்புகள் இருக்கவே கூடாது என நபி (ஸல்) அவர்கள் குறிப்பிட்டார்கள். அவ்விரு பண்புகளும் யாவை?
(1) வட்டியும் சூதும்
(2) பொய்யும் நாணயமின்மையும்
(3) பொய்யும் களவும்
(4) போதைப் பொருள் பாவனையும் நாணயமின்மையும்

13. பெரிய நீரத்தடாகமொன்றில் பாசி படர்ந்ததனால் நீரின் நிறமும் சுவையும் மாற்றமடைந்துள்ளது. இந்நீரில்
(1) வுழு செய்யலாம்.
(2) வுழு செய்யலாகாது.
(3) வுழு செய்யாதிருப்பது நல்லது.
(4) வுழு செய்து தொழலாம். ஆனால் சுத்தமான நீர் கிடைத்ததும் வுழு செய்து மீள தொழ வேண்டும்.

14. ஹஜ் கடமையை நிறைவேற்றுவதற்காகச் செல்லும் ஒருவர் ஹஜ்ஜை மாத்திரம் நிறைவேற்றுவதாக நிய்யத் வைத்தார். இச்செயற்பாடு
(1) அத்தமத்துஉ எனப்படும். (2) அல் - இப்ராத் எனப்படும்.
(3) அல் - கிரான் எனப்படும். (4) அல் - இத்லாக் எனப்படும்.

15. சீகிரியா ஓவியத்தைப் பார்வையிடுவதற்காக மாணவர்களை அழைத்துச் சென்ற ஆசிரியர், அவர்களை சுமார் ஐந்து மணியளவில் ளுஹர் தொழுகையை அஸருடன் சேர்த்துத் தொழ வைத்தார். இம்முறையானது
(1) ஜெம்உ எனப்படும். (2) கஸ்ரு எனப்படும்.
(3) ஜெம்உ தக்தீம் எனப்படும். (4) ஜெம்உ தஃகீர் எனப்படும்.

16. மஸ்ஜிதுல் கிப்லதைன் அமைந்துள்ள இடம்
(1) மக்கா (2) தாயிப் (3) மதீனா (4) ஜித்தா

17. ஒருவரிடம் வருடம் முழுவதும் ஏழு இலட்சம் ரூபாய் இருந்தது. அவ்வருடத்தில் ஸகாத்தின் நிஸாப் ரூ. 600,000 ஆகும். அவர் செலுத்த வேண்டிய கடன் ஒரு இலட்சம் ரூபா எனில், வருட முடிவில் அவர் செலுத்த வேண்டிய ஸகாத்தின் அளவு
(1) ரூ. 12,000 (2) ரூ. 13,000 (3) ரூ. 14,000 (4) ரூ. 15,000

Download all Past Papers> https://bookbeekid.com/resource/past-papers/

**18.** அல் - குர்ஆனில் இடம்பெற்றுள்ள நீண்ட சூரா
(1) அல் - க.்பு (2) ஆல இம்ரான் (3) அல் - பகரா (4) அல் - முல்க்

**19.** இஸ்லாமிய சட்டக்கலை வளர்ச்சிக்குப் பங்களிப்புச் செய்துள்ள பிரபலமான இமாம்களுள் ஒருவர்
(1) இமாம் ஷாபிஈ (ரஹ்) (2) இமாம் கஸ்ஸாலி (ரஹ்)
(3) இமாம் இப்னு கஸீர் (ரஹ்) (4) இமாம் புஹாரி (ரஹ்)

**20.** இறந்த கணவனுக்காக இத்தா அனுஷ்டிக்கும் ஒரு பெண் கட்டாயம் **தவிர்த்துக்** கொள்ள வேண்டிய ஒரு விடயம்
(1) திருமணம் முடித்தல் (2) உழைப்பதற்காக வெளியே செல்லல்
(3) தொலைக்காட்சி பார்த்தல் (4) வைத்தியரிடம் செல்லல்

**21.** "அறபு மொழி ஒவ்வொரு முஸ்லிமினதும் வீட்டு மொழியாக இருக்க வேண்டுமென விரும்புகிறேன்" எனக்கூறிய நம் நாட்டு அறிஞர்
(1) டீ.பி ஜாயா (2) அறிஞர் சித்திலெப்பை
(3) ஏ.எம்.ஏ அஸீஸ் (4) சேர் மாகான் மாகார்

**22.** கீழே **X, Y** எனும் நிரல்களில் தரப்பட்டுள்ள தகவல்கள் ஏதோவொரு வகையில் ஒன்றுடனொன்று தொடர்புடையவை. அதன்படி **Y** நிரலில் உள்ளவற்றை **X** நிரலில் உள்ளவற்றுடன் தொடர்புபடுத்தும்போது சரியான ஒழுங்குமுறையில் அமையும் விடையினைத் தெரிவுசெய்க.

| X | Y |
|---|---|
| (i) இபாதத் | A - கைவெட்டுதல் |
| (ii) முஆமலாத் | B - ஈகை |
| (iii) அஹ்லாக் | C - ஸகாத் |
| (iv) ஹுதூத் | D - கூட்டு வியாபாரம் |

(1) A B C D (2) B C D A (3) C D B A (4) D C B A

**23.** ஜனாஸா தொழுகையில் மூன்றாம் தக்பீருக்குப் பின்னர் ஓதவேண்டியது
(1) ஸூரதுல் பாதிஹா (2) நபி (ஸல்) அவர்கள் மீது ஸலவாத்து
(3) ஜனாஸாவுக்காக பிரார்த்தித்தல் (4) ஸலாம் கூறல்

**24.** குளிப்புக் கடமையானவர் தண்ணீரைப் பயன்படுத்த முடியாது என்பதற்காக தொழுகையை உரிய நேரத்தில் நிறைவேற்ற மறுக்கிறார். அவருக்கு நீர் கூறும் ஆலோசனை யாது?
(1) நீங்கள் குளித்து கட்டாயம் தொழுகையை உடன் நிறைவேற்ற வேண்டும்.
(2) நீங்கள் தயம்மும் செய்து தொழ வேண்டும்.
(3) தொழுகையை தவிர்க்க உங்களுக்கு அனுமதி உண்டு.
(4) நீங்கள் தொழுகையை பின்னர் கழா செய்ய வேண்டும்.

**25.** மனைவியை மீட்டுக்கொள்வதற்கு வாய்ப்பளிக்கும் விவாகரத்து முறை
(1) ரஜஈ (2) பாயின் (3) ழிஹார் (4) ஈழாஉ

**26.** மார்க்கரீதியில் அனுமதிக்கப்பட்ட பயணத்தை மேற்கொண்டு நிர்க்கதியான நிலையில் ஸகாத் பெறுவதற்கு உரித்துடையவர்
(1) காரிமூன் (2) இப்னு ஸபீல் (3) பீஸபீல் (4) முஸாபிர்

**27.** ஸகாத், ஸகாதுல் பித்ரா ஆகியன தொடர்பான மிகச்சரியான கூற்று
(1) ஸகாத் பர்ளு, ஸகாதுல் பித்ரா சுன்னத் ஆகும்.
(2) இரண்டும் ரமழான் மாதத்தில் நிறைவேற்றப்படல் வேண்டும்.
(3) இரண்டும் ஒரே நேரத்தில் கடமையாக்கப்பட்டவை.
(4) ஸகாதுல் பித்ரா முன்பும் ஸகாத் அதன் பின்பும் கடமையாக்கப்பட்டவை.

**28.** திருமணத்தில் வலியாக இருப்பதற்குப் **பொருத்தமற்றவர்**
(1) தந்தை (2) தந்தையின் தந்தை
(3) தாயின் சகோதரன் (4) தந்தைவழிச் சகோதரனின் மகன்


Download all Past Papers>> https://bookbeekid.com/resource/past-papers/

**29.** நபி (ஸல்) அவர்கள் இறுதியாக மணம்முடித்த விதவைப் பெண்
(1) மய்மூனா (ரழி) (2) ஸபிய்யா (ரழி) (3) ஸைனப் (ரழி) (4) உம்மு ஹபீபா (ரழி)

**30.** 'ஹய்ய அலஸ் ஸலாஹ்' என்பதன் பொருள்
(1) தொழுகை ஆரம்பமாகிவிட்டது.
(2) தொழுகைக்கு விரைந்து வாருங்கள்.
(3) வெற்றியின் பக்கம் விரைந்து வாருங்கள்.
(4) தொழுகை தூக்கத்தைவிடச் சிறந்தது.

**31.** மனோ இச்சைக்கு ஆட்பட்டு பாவங்களைச் செய்துகொண்டிருந்த ஒரு மாணவன் 'தஸ்கியதுன் நப்ஸ்' என்ற பாடத்தைக் கற்ற பின்னர் மனம் நொந்து தன்னை மாற்றிக்கொள்ள எண்ணினான். இவ்வாறு எண்ணும் உள்ளம்,
(1) நப்ஸுல் முத்ம இன்னா எனப்படும். (2) நப்ஸுல் லவ்வாமா எனப்படும்.
(3) நப்ஸுல் அம்மாரா எனப்படும். (4) நப்ஸுன் ஸலீம் எனப்படும்.

**32.** இலங்கையில் இஸ்லாம் பற்றிக் குறிப்பிடும் 'புதூஹுல் புல்தான்' எனும் நூலின் ஆசிரியர்
(1) இப்னு ஷஹ்ரயார் (2) இப்னுல் அரபி (3) இப்னு ஹிஷாம் (4) பலாதூரி

**33.** ஹுகூகுல் இபாதில் அடங்கும் விடயம்
(1) அல் - குர்ஆன் ஓதல் (2) சுன்னத்தான தொழுகையை நிறைவேற்றல்
(3) சுற்றாடலைப் பேணிப் பாதுகாத்தல் (4) ஹதீஸ்களை மனனம் செய்தல்

**34.** அதிகமான ஹதீஸ்களை அறிவித்தவராகக் கருதப்படும் நபித்தோழர்
(1) அனஸ் (ரழி) (2) தல்ஹா (ரழி) (3) உமர் (ரழி) (4) அபூஹுரைரா (ரழி)

**35.** 'கியாமுல்லைல்' என்பது
(1) ரமழான் மாத இரவில் வணக்க வழிபாடுகளில் ஈடுபடுதல்
(2) ரமழான் மாத 27ஆம் இரவில் வணக்கத்தில் ஈடுபடுதல்
(3) இரவு நேரத்தை நல்லமல்களில் கழித்தல்
(4) ரமழான் மாத இரவில் பிந்திய பகுதியை வித்ர் போன்ற வணக்கங்களில் கழித்தல்

**36.** 'தர்தீபுந்நுஸுல்' என்பது
(1) அல் - குர்ஆன் ஓதும் முறை
(2) அல் - குர்ஆன் எழுதப்பட்ட ஒழுங்குமுறை
(3) அல் - குர்ஆன் இறங்கிய ஒழுங்குமுறை
(4) அல் - குர்ஆன் பாதுகாக்கப்பட்ட ஒழுங்குமுறை

**37.** அவதூறு கூறிய ஒருவருக்கு இஸ்லாம் வழங்கும் தண்டனை
(1) 10 கசையடிகள் (2) 40 கசையடிகள் (3) 60 கசையடிகள் (4) 80 கசையடிகள்

**38.** இஸ்லாத்தைப் போதிப்பதற்காக இலங்கைக்கு அனுப்பப்பட்ட சமயப் போதகர்
(1) காலித் இப்னு பகாயா (2) ஒறாபி பாஷா
(3) இப்னு பதூதா (4) வஹப் இப்னு அபிஹப்ஸா

**39.** நஜீஸ் கலந்த ஆடைகளைச் சலவை இயந்திரத்திலிட்டுக் (Washing Machine) கழுவும்போது கவனிக்க வேண்டிய முக்கிய அம்சம்
(1) நன்றாகக் கழுவுதல்
(2) மணமான சலவைத்தூளை உபயோகித்தல்
(3) மூன்று முறை கழுவுதல்
(4) சலவை இயந்திரத்திலிருந்து வெளியில் எடுத்து ஒவ்வொரு ஆடையையும் குறைந்தபட்சம் ஒரு முறையாவது நீரை ஓடவிட்டுக் கழுவுதல்

**40.** 'முஹாஸபா' என்பதன் மூலம் கருதப்படுவது
(1) சுய விசாரணை (2) உளத்தூய்மை
(3) இறை திருப்தி (4) பொறுமையைக் கடைப்பிடித்தல்

* *



Download all Past Papers> https://bookbeekid.com/resource/past-papers/

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்

රහස්‍යයි
அந்தரங்கமானது

## අ.පො.ස. (සා.පෙළ) විභාගය - 2018
## க.பொ.த (சா.தர)ப் பரீட்சை - 2018

විෂයය අංකය / பாட இலக்கம்: **16** විෂයය / பாடம்: **இஸ்லாம்**

### I පත්‍රය - පිළිතුරු
### I பத்திரம் - விடைகள்

| ප්‍රශ්න අංකය வினா இல. | පිළිතුරු අංකය விடை இல. | ප්‍රශ්න අංකය வினா இல. | පිළිතුරු අංකය விடை இல. | ප්‍රශ්න අංකය வினா இல. | පිළිතුරු අංකය விடை இல. | ප්‍රශ්න අංකය வினா இல. | පිළිතුරු අංකය விடை இல. |
|---|---|---|---|---|---|---|---|
| 01. | 3 | 11. | 2 | 21. | 2 | 31. | 2 |
| 02. | 1 | 12. | 2 | 22. | 3 | 32. | 4 |
| 03. | 3 | 13. | 1 | 23. | 3 | 33. | 3 |
| 04. | 2 | 14. | 2 | 24. | 2 | 34. | 4 |
| 05. | 1 | 15. | 4 | 25. | 1 | 35. | 3 |
| 06. | 4 | 16. | 3 | 26. | 2 | 36. | 3 |
| 07. | 3, 4 | 17. | 4 | 27. | 4 | 37. | 4 |
| 08. | 4 | 18. | 3 | 28. | 3 | 38. | 1 |
| 09. | 2 | 19. | 1 | 29. | 1 | 39. | 4 |
| 10. | 4 | 20. | 1 | 30. | 2 | 40. | 1 |

විශේෂ උපදෙස් / விசேட அறிவுறுத்தல் } එක් පිළිතුරකට ලකුණු / ஒரு சரியான விடைக்கு **01** බැගින் / புள்ளி வீதம்

මුළු ලකුණු / மொத்தப் புள்ளிகள் **01 × 40 = 40**

---

පහත නිදසුනෙහි දැක්වෙන පරිදි බහුවරණ උත්තරපත්‍රයේ අවසාන තීරුවේ ලකුණු ඇතුළත් කරන්න.
கீழ் குறிப்பிடப்பட்டிருக்கும் உதாரணத்திற்கு அமைய பல்தேர்வு வினாக்களுக்குரிய புள்ளிகளை பல்தேர்வு வினாப்பத்திரத்தின் இறுதியில் பதிக.

නිවැරදි පිළිතුරු සංඛ්‍යාව / சரியான விடைகளின் தொகை: 25/40

I පත්‍රයේ මුළු ලකුණු / பத்திரம் I இன் மொத்தப்புள்ளி: 25/40



Download all Past Papers>> https://bookbeekid.com/resource/past-papers/

# இஸ்லாம் - 2018
## புதிய பாடத்திட்டம்
## இஸ்லாம் II

1. சுருக்கமான விடை தருக.

(i) நபி இப்ராஹீம் (அலை) அவர்கள் நெருப்பில் எறியப்பட்டபோது கூறிய வாசகம் யாது?

(ii) ஜாஹிலிய்யாக் காலத்தில் காணப்பட்ட சந்தைகள் **இரண்டினைப்** பெயரிடுக.

(iii) தற்காலிக மஹ்ரமிகளுக்கு **இரண்டு** உதாரணங்கள் தருக.

(iv) அர்கானுல் கியாஸைக் குறிப்பிடுக.

(v) சமூக நல்லிணக்கத்தை ஏற்படுத்துவதற்கு இஸ்லாம் காட்டியுள்ள வழிமுறைகள் **இரண்டை** எழுதுக.

(vi) தவ்பா அங்கீகரிக்கப்படுவதற்குத் தேவையான நிபந்தனைகள் **இரண்டினைக்** குறிப்பிடுக.

(vii) வியாபாரப் பொருட்கள் கொண்டிருக்க வேண்டிய பண்புகள் **இரண்டினை** எழுதுக.

(viii) இஸ்லாம், பெண்களுக்கு வழங்கியுள்ள உரிமைகள் **இரண்டினைத்** தருக.

(ix) நோன்பின் பர்ளுகள் **இரண்டினையும்** குறிப்பிடுக.

(x) பிள்ளைகள் பெற்றோருக்குச் செய்ய வேண்டிய கடமைகள் **இரண்டினைக்** குறிப்பிடுக.

1.

i. ஹஸ்பியல்லாஹு வநிஃமல் வகீல்

(2 புள்ளிகள்)

ii. உக்காழ், மிஜன்னா, துல் மஜாஸ்

(இவற்றுள் எவையேனும் இரண்டு எழுதப்பட்டிருப்பின் (1x2=2 புள்ளிகள்)

iii. - மனைவியின் சகோதரி
- மனைவியின் தாயின் சகோதரி
- மனைவியின் தந்தையின் சகோதரி
- இத்தாவில் உள்ள பெண்
- இஹ்ராம் தரித்த பெண்
- விபச்சாரி
- முஷ்ரிக்கான பெண்
- இன்னொருவரின் மனைவி

(இவற்றுள் எவையேனும் இரண்டு எழுதப்பட்டிருப்பின் (1x2=2 புள்ளிகள்)

iv. அஸ்ல், பரஉ, இல்லத், ஹுக்ம்

(இவற்றுள் எவையேனும் இரண்டு எழுதப்பட்டிருப்பின் (1x2=2 புள்ளிகள்)

v. - மனிதர்கள் என்ற வகையில் உதவி ஒத்தாசைகள் புரிதல்
- சகோதர இனத்தவர்களுடன் சினேகபூர்மாக நடத்தல்
- இனமத சுய நலன்களைக் கைவிடல்
- பிற சமூகங்களின் சமயங்களைத் தூற்றாதிருத்தல்
- பிற சமூகங்களின் கலாசாரங்களை மதித்தல்
- நீதி நேர்மையுடன் நடத்தல்

(இவற்றுள் எவையேனும் இரண்டு எழுதப்பட்டிருப்பின் (1x2=2 புள்ளிகள்)


Download all Past Papers> https://bookbeekid.com/resource/past-papers/

vi. - தூய எண்ணம்
- பாவத்தை நினைத்து மனம் வருந்துதல்
- பாவத்தை விட்டும் நீங்குதல்
- பாவத்தை மீண்டும் செய்வதில்லை என உறுதி பூணல்
- மனிதர்களுடன் தொடர்புபட்டதாயின் முதலில் அவர்களிடம் மன்னிப்புக் கோரல்

(இவற்றுள் எவையேனும் இரண்டு எழுதப்பட்டிருப்பின் (1x2=2 புள்ளிகள்)

vii.
- விற்பவருக்கு பொருள் சொந்தமாக இருத்தல்
- வாங்குபவருக்கு பொருளைக் கையளிக்கக் கூடியதாக இருத்தல்
- பொருள் கையிருப்பில் இருத்தல்
- ஷரீஆவின் அடிப்படையில் பயனுள்ளதாகவும் சுத்தமானதாகவும் இருத்தல்

(இவை போன்ற எவையேனும் இரண்டு எழுதப்பட்டிருப்பின் (1x2=2 புள்ளிகள்)

viii.
- உயிர் வாழ்வதற்கான உரிமை
- கருத்து வெளிப்பாட்டு உரிமை
- கணவனைத் தெரிவு செய்யும் உரிமை
- சொத்துரிமை
- கல்வி கற்கும் உரிமை
- தொழில் செய்யும் உரிமை
- விவாக விடுதலை பெறும் உரிமை

(இவற்றுள் எவையேனும் இரண்டு எழுதப்பட்டிருப்பின் (1x2=2 புள்ளிகள்)

ix. - நிய்யத்து வைத்தல்
- கிழக்கு வெளுத்தது முதல் சூரியன் மறையும் வரை நோன்பை முறிக்கும் செயல்களைத் தவிர்த்தல்

(இவை இரண்டையும் எழுதியிருப்பின் (1x2=2 புள்ளிகள்)

x.
- பெற்றோர் மீது அன்பு வைத்தல்
- அவர்களுக்குக் கட்டுப்படல்
- அவர்களுக்காகப் பிரார்த்தித்தல்
- அவர்களின் தேவைகளை நிறைவேற்றல்

(இவை போன்ற இரண்டு எழுதப்பட்டிருப்பின் (1x2=2 புள்ளிகள்)

**(மொத்தம் 2x 10=20 புள்ளிகள்)**


Download all Past Papers> https://bookbeekid.com/resource/past-papers/

**2.** (i) 'ஈமான் முபஸ்ஸல்' என்றால் என்ன?

(ii) ஷிர்க் அக்பரின் வகைகள் **இரண்டையும்** உதாரணங்களுடன் குறிப்பிடுக.

(iii) ஈமான் ஒரு முஸ்லிமின் வாழ்வில் ஏற்படுத்தும் தாக்கங்கள் **ஐந்தினைச்** சுருக்கமாக விளக்குக.

i. - விரிவான ஈமான்

- ஈமான் கொள்ள வேண்டிய ஆறு விடயங்களையும் நம்பி ஏற்றுக்கொள்ளல்

(1x2=2 புள்ளிகள்)

ii. - ஷிர்க்குல் ஜலிய்யு - தெளிவான ஷிர்க்

- ஷிர்க்குல் கபிய்யு - மறைவான ஷிர்க்

**(அல்லது)**

(இவற்றுக்கான உதாரணங்கள் 3 எழுதப்பட்டிருப்பின் 1 × 3 = 3 புள்ளிகள்)

iii. - அல்லாஹ்வைத் தவிர வேறு எதனையும் வணங்காதிருத்தல், வழிபடாதிருத்தல், பிரார்த்திக்காதிருத்தல்.

- வெற்றியோ தோல்வியோ அனைத்தையும் அல்லாஹ்வின் மீது பொறுப்புச் சாட்டுதல்

- மறுமையில் விசாரணை உண்டு என்பதை நம்பி பாவங்களைத் தவிர்ந்து வாழ்தல்

- நன்மை செய்யும் மனப்பாங்கு வளர்த்தல்.

- அனைத்து அடிமைத்தனங்களில் இருந்தும் விடுதலை கிடைத்தல்

- அல்லாஹ்வின் திருப்தியைப் பெறுவதற்காக எதனையும் தியாகம் செய்ய முன்வரல்

இவை போன்ற பொருத்தமான ஐந்து கருத்துக்கள் எழுதியிருப்பின் 1x5=5 புள்ளிகள்

(மொத்தம் 2+3+5=10 புள்ளிகள்)


Download all Past Papers>> https://bookbeekid.com/resource/past-papers/

**3.** (i) தவாபின் வகைகளில் **இரண்டினைப்** பெயரிடுக.

(ii) ஹஜ்ஜின் மூலம் கிடைக்கும் பயன்கள் **மூன்றினைக்** குறிப்பிடுக.

(iii) ஹஜ்ஜின் வாஜிபுகள் **ஐந்தினைச்** சுருக்கமாக விளக்குக.

i. - தவாபுல் குதூம்
- தவாபுல் இபாழா
- தவாபுல் விதா

(இவற்றுள் எவையேனும் இரண்டு எழுதப்பட்டிருப்பின் (1x2=2 புள்ளிகள்)

ii. - தியாகம், பொறுமை, இறையச்சம் போன்ற பண்புகளை வளர்த்தல்
- மறுமையில் சுவனம் கிடைத்தல்
- பாவங்கள் மன்னிக்கப்பட்டு அன்று பிறந்த பாலகன் போலாதல்
- சகோதரத்துவம், சமத்துவம், ஒற்றுமை போன்ற பண்புகளைப் பெறல்
- இஸ்லாமிய வரலாற்றுத் தலங்களுடன் நேரடியான அனுபவத்தைப் பெறல்

(இவை போன்ற மூன்று பயன்கள் எழுதியிருப்பின் 1x3=3 புள்ளிகள்)

iii. - குறிப்பிட்ட மீக்காதில் நிய்யத் வைத்தல்
- துல்ஹஜ் பத்தாம் நாள் முஸ்தலிபாவில் தங்குதல்
- ஐயாமுத் தஷ்ரீக் எனப்படும் துல்ஹஜ் 11,12,13 ஆகிய இரவுகளில் மினாவில் தங்குதல்
- துல்ஹஜ் 10 ஜம்ரதுல் அகபாவில் ஏழு கற்களை எறிதல்
- அய்யாமுத் தஷ்ரீக் தினங்களில் மதியத்துக்குப் பின்னர் ஜம்ரதுல் அகபா ஜம்ரதுல் உஸ்தா, ஜம்ரதுல் ஊலா ஆகிய மூன்று ஜம்ராக்களில் ஒவ்வொன்றிலும் ஏழு ஏழு கற்கள் எறிதல்
- தவாபுல் விதாவை நிறைவேற்றல்

இவற்றுள் எவையேனும் 5 எழுதியிருப்பின் 1x5=5 புள்ளிகள்

(2+3+5=10 புள்ளிகள்)

Download all Past Papers> https://bookbeekid.com/resource/past-papers/

**4.** (i) ஷீஆ, கவாரிஜ் ஆகிய பதங்களை வேறுபடுத்துக.

(ii) மக்கா வெற்றியின் விளைவுகள் **மூன்றினைத்** தருக.

(iii) ஒரு வாலிபன் தன்னைத் தீமைகளிலிருந்து பாதுகாத்துக் கொள்வதற்குப் பின்பற்ற வேண்டிய வழிமுறைகளாக இஸ்லாம் குறிப்பிடும் **ஐந்து** விடயங்களைச் சுருக்கமாக விளக்குக.

i. - ஷீஆ – பிறிவு, கட்சி, ஆதரவாளர்கள்
- கிலாபத் அலி (றழி) அவர்களுக்கே உரியது என்ற கொள்கை உடையோர்
- கவாரிஜ் - வெளியேறிச் சென்றோர். ஸிப்பீன் யுத்தத்தின் போது அலி (றழி) அவர்களின் படையிலிருந்து வெளியேறிச் சென்றோர்

(2 கருத்துக்கள் குறிப்பிடப்பட்டிருப்பின் 1x2=2 புள்ளிகள்)

ii. - முஸ்லிம்கள் தமது சொந்த இடங்களில் வாழும் வாய்ப்புக் கிடைத்தமை
- முஸ்லிம்கள் அச்சமின்றி வாழும் சூழல் ஏற்பட்டமை
- இஸ்லாம் பலமிக்க சக்தியாக மாறியமை
- கஃபாவிலிருந்து சிலைகள் நீக்கப்பட்டமை
- முழு மக்காவும் நபி (ஸல்) அவர்களின் கட்டுப்பாட்டிற்குள் வந்தமை
- இஸ்லாத்தில் நுழைவோர் எண்ணிக்கை அதிகரித்துச் சென்றமை
- தனக்குக் கொடுமை செய்தோருக்கும் பொதுமன்னிப்பு வழங்கியமை

(இவை போன்ற 3 அம்சங்கள் எழுதப்பட்டிருப்பின் 1x3 =3 புள்ளிகள்)

iii. - ஆன்மீக செயற்பாடுகளில் ஈடுபடல் (திக்ர், தௌபா, திலாவதுல் குர்ஆன் போன்ற)

- தீய நட்புகளில் இருந்து விலகி இருத்தல்

- இஸ்லாமிய வழிகாட்டல்களைப் பேணி நடத்தல்

- ஆபாசத்தைத் தூண்டும் காரியங்களில் இருந்து விலகி இருத்தல்

- அஜ்னபி, மஹ்ரமி வரையறையைப் பேணி நடத்தல்

- மார்க்கச் சொற்பொழிவுகளைச் செவிமடுத்தல்

- மார்க்கத்துடன் தொடர்புபட்ட புத்தகங்களை வாசித்தல்

(இவைபோன்ற ஐந்து கருத்துக்கள் சுருக்கமாக விளக்கப்பட்டிருப்பின் 1× 5 = 5 புள்ளிகள்)

(2 + 3 + 5 = 10 புள்ளிகள்)


Download all Past Papers >> https://bookbeeka.com/resource/past-papers/

**5.** (i) 'த.'.வா' என்பதன் மூலம் கருதப்படுவது யாது?

(ii) மக்கா கால த.'.வாவின்போது நபி (ஸல்) அவர்கள் எதிர்கொண்ட சவால்கள் **மூன்றினைக்** குறிப்பிடுக.

(iii) ஹிஜ்ரத் பயணத்தின் முக்கியத்துவம் பற்றிச் சுருக்கமாக விளக்குக.

i. - தஃவா என்பது இஸ்லாத்தின் பக்கம் மக்களை அழைப்பதாகும்.

(2 புள்ளிகள்)

ii. - சமூகத் தலைமைகளின் கடும் எதிர்ப்புக்களைச் சந்திக்க நேரிட்டமை (அபூ ஜஹ்ல், அபூ லஹப்,)
- எதிரிகளின் சொல் ரீதியான தூற்றல்களை எதிர்கொண்டமை. (சூனியக்காரன், பொய்யன்.)
- இஸ்லாத்தைப் பிரசாரம் செய்வதற்கு இடையூறு ஏற்பட்டமை.
- நபி (ஸல்) அவர்களை உடல் ரீதியான சித்திரவதைக்குட்படுத்தியமை (கழுத்தை திருகினர். ஒட்டகத்தின் அழுகிய குடலை வீசினர்)
- இஸ்லாத்தை ஏற்றவர்கள் சித்திரவதைகளுக்கு உட்படுத்தியமை
- சமூக பகிஷ்கரிப்பிற்கு உட்படுத்தப்பட்டமை. (ஷிஃபு அபீதாலிபில் மூன்று வருடங்கள்)

(இவை போன்ற பொருத்தமான மூன்று விடயங்கள் எழுதப்பட்டிருப்பின் 1x3 = 3 புள்ளிகள்)

iii. - இஸ்லாமிய சமூக உருவாக்கத்திற்கு வழிவகுத்தமை
- இஸ்லாமிய கிலாபத்தின் ஆரம்பமாக அமைந்தமை.
- வரலாற்றின் திருப்பு முனையாக அமைந்தமை.
- அமைதியான சூழல் தோற்றுவிக்கப்பட்டமை. (அவ்ஸ்-கஸ்ரஜ் ஒற்றுமை, யூதர்களுடன் உடன்படிக்கை)
- குறைஷிக் காபிர்களின் தொல்லைகளில் இருந்து நிவாரணம் கிடைத்தமை.
- இஸ்லாம் பலம் பெற்றமை.
- மஸ்ஜிதுந் நபவி நிர்மாணிக்கப்பட்டமை.

(இவைபோன்ற ஐந்து கருத்துக்கள் சுருக்கமாக விளக்கப்பட்டிருப்பின் 1× 5 = 5 புள்ளிகள்)

(2 + 3 + 5 = 10 புள்ளிகள்)



Download all Past Papers> https://bookbeekid.com/resource/past-papers/

6. (i) பெரும்பாவங்களில் **நான்கினைத்** தருக.
(ii) பலதாரமணம் அனுமதிக்கப்பட்டமைக்கான காரணங்கள் **மூன்றைக்** குறிப்பிடுக.
(iii) இஸ்லாமிய பொருளாதார முறையின் சிறப்பம்சங்கள் **ஐந்தினைத்** தெளிவுபடுத்துக.

i. - அல்லாஹ்வுக்கு இணை வைத்தல்
- சூனியம் செய்தல்
- கொலை செய்தல்
- வட்டி
- அனாதைகளின் சொத்துக்களை அபகரித்தல்
- போரின் போது புறமுதுகு காட்டி ஓடல்
- கற்புள்ள பெண் மீது அவதூறு கூறல்

(இவற்றுள் ஏதேனும் 4 எழுதப்பட்டிருப்பின் $1/2 \times 4=2$ புள்ளிகள்)

ii. - விதவைகளுக்கு வாழ்வளித்தல்
- அநாதைகளைப் பராமரித்தல்
- முறையற்ற பாலியல் தொடர்பிலிருந்து காத்துக் கொள்ளல்

(இவை போன்ற பொருத்தமான மூன்று கருத்துக்கள் எழுதப்பட்டிருப்பின் 1x3 = 3 புள்ளிகள்)

iii. - தெய்வீகத் தன்மை
- சமூகத்திலுள்ள பொருளாதார ஏற்றத்தாழ்வுகளை சீர்செய்தல்
- சமூக, தனி மனித நலன்களுக்கிடையே இணக்கம் காணல்
- ஆன்மீக, லௌகீகத் தேவைகள் இரண்டையும் சமகாலத்தில் கவனத்தில் கொள்ளல்
- எவருக்கும் அநீதி இழைக்காமை
- நெகிழ்வுத் தன்மை கொண்டது

(இவைபோன்ற ஐந்து அம்சங்கள் தெளிவுப்படுத்தப்பட்டிருப்பின் 1x5 =5 புள்ளிகள்
(2+3+5=10 புள்ளிகள்)


Download all Past Papers> https://bookbeekid.com/resource/past-papers/

**7.** பின்வருவனவற்றுள் **இரண்டிற்குச்** சிறுகுறிப்பு எழுதுக.

(i) அல் - குர்ஆன் அருளப்படல்

(ii) கஸ்ரு - ஜம்உத் தொழுகை

(iii) தேசப்பற்று

(iv) மஸ்ஜிதுன் நபவி

i. **அல்குர்ஆன் அருளப்படல்**

- முதல் வஹி அருளப்பட்ட நிகழ்வு
- ஸூறா அலக்கின் முதல் 5 வசனங்களும் அருளப்பட்டமை.
- முதல் வஹி அருளப்பட்டு சிறிது கால இடைவெளிக்குப் பின்னரே மீண்டும் அருளப்பட்டமை
- குத்தாபுல் வஹி – வஹியை எழுதுவோர் நபி (ஸல்) அவர்களின் கண்காணிப்பில் எழுதி வந்தமை
- வசனங்களாகவும், சூறாக்களாகவும் அருளப்பட்டமை
- அருளப்பட்ட ஒழுங்கு தர்தீபுந் நுஸ/ல் எனப்பட்டமை
- மக்காவிலும் மதீனாவிலும் அருளப்பட்டமை
- கால சூழலுக்கு ஏற்ப 23 வருடங்களாக அருளப்பட்டமை
- பிறர் கேட்ட வினாக்களுக்கு பதிலாக அருளப்பட்டமை
- பிரச்சினைகளுக்குத் தீர்வாகவும் அருளப்பட்டமை
  (இவை போன்ற 5 கருத்துக்கள் தொடர்பாக சிறுவிளக்கம் எழுதப்பட்டிருப்பின் 5 புள்ளிகள்)

ii. **கஸ்ரு - ஜம்உ**

- கஸ்ர் என்பது தொழுகையைச் சுருக்கித் தொழுவதைக் குறிக்கும்
- ஜம்உ என்பது சேர்த்துத் தொழுவதைக் குறிக்கும்
- இது பிரயாணிகளுக்கு தொழுகையை நிறைவேற்ற வழங்கப்பட்ட சலுகையாகும்.
- நான்கு ரக்அத் கொண்ட தொழுகையை இரண்டு ரக்அத்தாகத் தொழுவதை கஸ்ர் என்போம். நான்கு ரக்அத் கொண்ட தொழுகையை மாத்திரமே கஸ்ர் செய்ய முடியும்.
- லுஹர் – அஸர் தொழுகைகளை, மஃரிப் – இஷா தொழுகைகளைச் சேர்த்துத் தொழ முடியும்.
- கஸ்ர், ஜம்உ என்பன தொழுகையை எந்நிலையிலும் விட்டுவிடக் கூடாது என்பதை உணர்த்துகின்றது.
- ஜம்உத் தொழுகை தக்தீம், தஃகீர் என இருவகைப்படும்.
  (இவை போன்ற ஐந்து கருத்துக்கள் தொடர்பாக சிறு விளக்கம் எழுதப்பட்டிருப்பின் 5 புள்ளிகள்)


Download all Past Papers> https://bookbeekid.com/resource/past-papers/

**iii. தேசப்பற்று**

- தான் வாழும் நாட்டை நேசித்தல்

- நபி (ஸல்) அவர்கள் ஹிஜ்ரத்தின் போது தான் வாழ்ந்த மக்காவின் மீதிருந்த நேசத்தை வார்த்தைகளில் வெளிப்படுத்தியமை.

- தேசத்திற்கு விசுவாசமாக நடத்தல்.

- தேசத்தின் ஐக்கியத்துகாகப் பங்காற்றுதல்.

- தேசம் எதிர்கொள்ளும் சவால்களை வெற்றிகொள்ள பங்களித்தல்.

- தேசத்தின் சிவில் சட்டங்களை மதித்து நடத்தல்.

- தேசத்தின் முன்னேற்றத்திற்கு பங்களிப்புச் செய்தல்.

- சமூக விரோத செயல்களில் இருந்து தேசத்தைப் பாதுகாத்தல்.

(இவை போன்ற 5 கருத்துக்கள் தொடர்பாக சிறுவிளக்கம் எழுதப்பட்டிருப்பின் 5 புள்ளிகள்)

**iv. மஸ்ஜிதுன் நபவி**

- இது மதீனாவில் அமைந்துள்ளமை.

- இஸ்லாத்தில் இரண்டாவது புனிதஸ்தலமாக அங்கீகரிக்கப்பட்டுள்ளமை.

- நபி (ஸல்) அவர்களால் ஹிஜ்ரத்தைத் தொடர்ந்து கட்டப்பட்டமை.

- கிலாபத்தின் ஆரம்பத் தலமாக அமைந்தமை.

- இங்கு நிறைவேற்றப்படும் தொழுகை ஏனைய பள்ளிவாசல்களில் தொழுவதை விட 1000 மடங்கு அதிக நன்மை கொண்டதாக அமைந்துள்ளமை.

- அரசியல் சமூக பொருளாதார கேந்திர நிலையமாக நிலவியமை.

- புனித யாத்திரை செல்ல அனுமதிக்கப்பட்ட இடங்களுள் ஒன்றாக அமைந்துள்ளமை

- இதன் உருவாக்கம், தோற்றம் பற்றிய வரலாற்றுப் பின்னணி விளக்கப்பட்டிருத்தல்

(இவை போன்ற 5 கருத்துக்கள் தொடர்பாக சிறுவிளக்கம் எழுதப்பட்டிருப்பின் 5 புள்ளிகள்)

(5+5=10 புள்ளிகள்)


Download all Past Papers >> https://bookbeeki.com/resource/past-papers/

Download all Past Papers> https://bookbeekid.com/resource/past-papers/